## சமூகத்தில் - பொருளாதாரத்தில்

# பின்தங்கிய மாணவர்களுக்கு கல்விக் கண் திறந்த கல்லூரி!

## லயோலா கல்லூரி நூற்றாண்டு தொடக்க விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!

**சென்னை, ஆக. 3 -**

**“சமூகத்தில் பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களுக்குக் கல்விக் கண் திறந்த கல்லூரி லயோலா கல்லூரி” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை, லயோலா கல்லூரி நூற்றாண்டு தொடக்க விழாவில் உரையாற்றும்போது புகழாரம் சூட்டினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (1.8.2024) சென்னை, இலயோலா கல்லூரி நூற்றாண்டு தொடக்க விழாவில் ஆற்றிய உரை வருமாறு :-

லயோலா கல்லூரி நூற்றாண்டு தொடக்க விழாவில் பங்கேற்று சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய சென்னையில்எத்தனையோ கல்லூரிகள் இருந்தாலும் லயோலா மட்டும் தான் தனித்துத் தெரியும். கல்வி, ஸ்போர்ட்ஸ், ஆர்ட்ஸ் அனைத்தையும் லயோலா ஸ்டூடன்ஸ்தான் ஹைலைட்டாக தெரிவார்கள். ஏராளமான சாதனையாளர்களை உருவாக்கியிருக்கக்கூடிய இந்த லயோலா கல்லூரியின் நூற்றாண்டு விழாவில் நான் மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதேநேரத்தில் கவலையோடு நிற்கிறேன். இங்கே நான் படிக்காமல் சென்றுவிட்டேன் என்ற வருத்தத்தோடு. நான் படித்தது பிரஸிடன்ஸி கல்லூரி.

**‘லயோலா’ என்ற பெயரைச் சொன்னாலே பெருமைதான்!**

அதனால் இந்த நூற்றாண்டு விழாவில் கலந்து கொள்கின்ற நேரத்தில் ‘லயோலா’ என்று பெயரைச் சொன்னாலே, அது ஒரு பெருமைதான். ஒரு கெத்து தான்.

அப்படிப்பட்ட இந்த லயோலா கல்லூரியின் நிர்வாகிகள் ஆசிரியர்கள் - இந்நாள் மற்றும் முன்னாள் மாணவர்கள் என்று எல்லோருக்கும் என்னுடைய அன்பான வாழ்த்துகளையும், மகிழ்ச்சியையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். என்னுடைய மகன் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி படித்ததும் இந்த லயோலா காலேஜ்தான். இதைக்கூட குறிப்பிட்டுச் சொன்னார்கள். உதயநிதி மட்டுமல்ல, இங்கே இருக்கக்கூடிய நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், அவர் அண்ணன் சன் டிவி கலாநிதி மாறன், நான் மட்டும்தான் மிஸ் ஆகிவிட்டேன்.





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (1.8.2024) சென்னை, இலயோலா கல்லூரியில் நடைபெற்ற இலயோலா கல்லூரி நூற்றாண்டு தொடக்க விழாவில் கலந்து கொண்டு விழாப் பேருரையாற்றினார். இவ்விழாவில், சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு, உயர்கல்வித் துறை அமைச்சர் க.பொன்முடி, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர்கள் மருத்துவர் நா.எழிலன், இனிகோ இருதயராஜ், தமிழ்நாடு சிறுபான்மையினர் நல ஆணையத்தின் தலைவர் அருள் முனைவர் ஜோ அருண், தமிழ்நாடு சிறுபான்மையினர் நல ஆணையத்தின் முன்னாள் தலைவர் பீட்டர் அல்போன்ஸ், சென்னை இயேசு சபை மாநில தலைவர் அருள் முனைவர் செபமாலை இருதயராஜ், இலயோலா கலைமனைகள் அதிபர் அருள் முனைவர் அந்தோனி ராபின்சன், இலயோலா கல்லூரி செயலர் அருள் முனைவர் போனிபஸ் ஜெயராஜ், இலயோலா கல்லூரியின் முதல்வர் அருள் முனைவர் லூயிஸ் ஆரோக்கியராஜ், இலயோலா கல்லூரியின் முன்னாள் மாணவர் சங்க தலைவர் முனைவர் விஸ்வநாதன், துணை தலைவர் முனைவர் சேவியர் பிரிட்டோ, நூற்றாண்டு விழாக் குழு ஒருங்கிணைப்பாளர்கள், இலயோலா கல்லூரி முன்னாள் மாணவர் சங்க நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கல்லூரியில் தான் படித்திருக்கிறார்கள். அந்த வகையில் பார்த்தால் இந்த நிகழ்ச்சிக்கு நான் முதலமைச்சராக மட்டுமில்லை உங்கள் காலேஜில் படித்த மாணவரின் பெற்றோராகவும் வந்திருக்கிறேன்.

இன்றைக்கு எவ்வளவோ மாறிவிட்டது! சென்னையை சுற்றி மட்டுமில்லை, தமிழ்நாடு முழுக்க ஏராளமான கல்லூரிகளையும் - பல்கலைக்கழகங்களையும் உருவாக்கியிருக்கிறோம். ஆனால், நூறு ஆண்டுகளுக்கு முன்னால் இந்த நிலை இருந்ததா? இல்லை! தமிழ்நாடு முழுக்க இருக்கின்ற கல்லூரிகளை விரல்விட்டு எண்ணிவிடலாம் அப்போது! கல்விதான் அழிக்க முடியாத செல்வம் என்று சொல்கிறோமே, அந்த செல்வம் அப்போது எல்லோரும் கிடைக்கவில்லை; கிடைக்கவில்லை என்று சொல்வதைவிட கொடுக்கப்படவில்லை என்று தான் சொல்லவேண்டும்!

**சேவை மனப்பான்மையுடன் தொடங்கப்பட்ட கல்லூரி!**

அப்படிப்பட்ட காலகட்டத்தில், இங்கே பெருமையோடு பேசினார்கள். சேவை மனப்பான்மையுடன் இந்த லயோலா கல்லூரி தொடங்கப்பட்டது. அருட்தந்தை பிரான்சிஸ் பெட்ரம் எஸ்.ஜெ. மற்றும் அவருடைய சக இயேசு சபை அருட்பணியாளர்கள் இந்த காலேஜை தொடங்கினார்கள். தமிழ்நாட்டில் தன்னுடைய ஆட்சிக்காலத்தில் பல்லாயிரக்கணக்கான பள்ளிகளையும், கல்லூரிகளையும் உருவாக்கித் தந்த தலைவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுடைய பிறந்த நாள் என்பது 1924ஆம் ஆண்டில்தான் இந்த லயோலா நிறுவனத்துக்கும் அப்போதுதான் அடிக்கல் நாட்டப்பட்டது.

1925ஆம் ஆண்டு தன்னுடைய கல்விப் பணியை இந்தக் கல்லூரி தொடங்கியது. 75 மாணவர்களோடு தொடங்கப்பட்ட இந்தக் கல்லூரி இன்றைக்கு ஆயிரக்கணக்கான மாணவர்கள் படித்துக் கொண்டிருக்கிறார்கள்.

**நீதிக் கட்சியின் வழி வந்ததால் கல்விக்கு முக்கியத்துவம்!**

இன்னார்தான் படிக்கலாம் இன்னார் படிக்கக் கூடாது என்ற கட்டுப்பாடுகள் தலைவிரித்து ஆடிய காலத்தில் அனைவரும் படிக்கலாம் என்ற பெரிய வாசலை திறந்து விட்ட எத்தனையோ கல்லூரிகளில் லயோலா கல்லூரியும் மிகவும் முக்கியமான ஒன்று. சமூகத்தில், பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களுக்குக் கல்விக் கண்ணைத் திறந்து விட்ட கல்லூரி இந்தக் கல்லூரி.

இந்திய நாட்டின் முதல் பத்து சிறந்த கல்லூரிகளில் ஒன்றாக இந்த லயோலா கல்லூரி இருக்கிறது. இது லயோலாவுக்கு மட்டும் பெருமை மட்டுமில்லை, ஒட்டுமொத்த நம்முடைய தமிழ்நாட்டிற்கும் தான் பெருமை. இந்தியாவில் எந்த வகைப்பட்ட கல்வி நிறுவனத்தை எடுத்துக்கொண்டாலும் அதில் தலைசிறந்த கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள், கல்வி நிறுவனங்கள் அதிகம் இருக்கும் மாநிலமாக நம்முடைய தமிழ்நாடுதான் இருக்கிறது. இதற்குக் காரணம், கல்விதான் ஒருவரின் அனைத்துத் தடைகளையும் தகர்த்து தலைநிமிரச் செய்யும் என்று கல்வி புரட்சியை தொடங்கி வைத்த நீதிக்கட்சி. அந்த நீதிக்கட்சி வழிவந்தவர்கள் நாங்கள். அதனால்தான் கல்விக்கு நாங்கள் அதிகம் முக்கியத்துவத்துவம் தந்தோம். இன்னும் தந்து கொண்டிருக்கிறோம். தொடர்ந்து தருவோம் என்பதுதான் எங்களுடைய நம்பிக்கை.

**நான் முதல்வன், புதுமைப் பெண், தமிழ்ப்புதல்வன் போன்ற திட்டங்கள் அனைவருக்கும் தரமான கல்வி கிடைத்தால்தான் நம்முடைய திராவிட மாடல் என்று சொல்வதில் அர்த்தம் இருக்கும். பெருந்தலைவர் காமராசரின் காலம் பள்ளிக் கல்வியின் பொற்காலமாக இருந்தது. தலைவர் கலைஞர் ஆட்சிக்காலம் கல்லூரிக் கல்வியின் பொற்காலமாக இருந்தது. இன்றைய திராவிட மாடல் ஆட்சியானது உயர் கல்வியின் பொற்காலமாக ஆராய்ச்சிக் கல்வியின் பொற்காலமாக திகழ்ந்து வருகிறது.**

நாங்கள் நாடு ஒளிபெறப் பாடுபடுகிறோம். நீங்கள் மாணவர் சமுதாயம் ஒளிபெறப் பாடுபடுகிறீர்கள். தமிழ்நாடு ஒளிமயமானதாக இருப்பதை இந்தக் காலக்கட்டத்தில் லயோலாவும் தன்னுடைய நூற்றாண்டு விழாவை கொண்டாடுகிறது. உங்களின் சேவை விலைமதிப்பு இல்லாதது. உங்களுடைய உழைப்பு, கணக்கிட முடியாதது. அதனால்தான் உங்களுடைய புகழும் அளவிட முடியாததாக இருக்கிறது.

இந்த கல்லூரிக்குப் புகழும் பெருமையும் கிடைப்பது போல, இங்கே படிக்கின்ற மாணவர்களுக்கும் கிடைக்கவேண்டும்!

**கல்விக்கான தடைகள் புதிய வடிவங்களில் வருகிறது!**

இவ்வளவு பெரிய காலேஜில் படிக்க கிடைச்சிருக்கின்ற வாய்ப்பு எல்லோரும் நல்லபடியாக பயன்படுத்திக் கொள்ளவேண்டும். கல்வியின் தேவையை அடுத்தடுத்து வருகின்ற மாணவர்களுக்கும் புரிய வைக்க வேண்டும். ஏனென்றால், கல்விக்கான தடைகள் புதிய வடிவங்களில் வர தொடங்கியிருக்கிறது. கல்வியின் முக்கியத்துவத்தை குறைக்கின்ற மாதிரியான பேச்சுக்கள் மீண்டும் எழத் தொடங்கியிருக்கிறது. அதையெல்லாம் அரசியல் களத்தில் நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்; ஆனால் மாணவர்களான நீங்கள் அறிவுக்களத்தில் உள்ள பயணத்தை நீங்கள் பார்த்துக் கொள்ளுங்கள்!

நூற்றாண்டு கண்ட லயோலா கல்லூரி ‘ஆயிரமாண்டு வாழ்க, வாழ்க, வாழ்க, வாழ்க’ என்று வாழ்த்துகிறேன்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

### தங்கவயல் நகர தி.மு.க. சார்பில் ஆகஸ்ட் 11ஆம் தேதி

# கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா! சிறப்பு மலர் வெளியீடு!

### மாநிலங்களவை கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா பங்கேற்பு!

பெங்களூரு, ஆக. 3–

தங்கவயல் நகர திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு, கலைஞர் நூற்றாண்டு சிறப்பு மலர் வெளியீடு மற்றும் மக்களவை தேர்தலில் தமிழ்நாட்டில் 40/40 வெற்றி ஆகிய முப்பெரும் விழா ஆகஸ்ட் 11ம் தேதி நடக்கிறது. திமுக மாநிலங்களவை குழு தலைவரும் கழக கொள்கை பரப்பு செயலாளருமான திருச்சி என்.சிவா சிறப்பு விருந்தினராக பங்கேற்கிறார்.

தங்கவயல் நகர திராவிட முன்னேற்ற கழகம் சார்பில் கலைஞரின் நூற்றாண்டு நிறைவு விழா, நூற்றாண்டு விழா சிறப்பு மலர் வெளியிட்டு விழா, நாடாளுமன்ற தேர்தல் வெற்றி விழா, பாவேந்தர் நூலக திறப்பு மற்றும் மரக்கன்றுகள் நடும் விழா சிறப்பாக நடத்த முடிவு செய்யப்பட்டது. அதன்படி வரும் ஆகஸ்ட் 11ஆம் தேதி ஞாயிற்றுகிழமை கொண்டாடப்படுகிறது.

மறைந்த கழக போராளி சரவணன் கொடி மேடையில் கழகக் கொடியை மகளிரணி நிர்வாகி நிர்மலா ஏற்றி வைக்கிறார்.

மறைந்த கழக முன்னோடிகள் கே.எஸ்.கோபாலகிருஷ்ணன், டி.கே.தாமரைவிழியன், பெ.சீராளன் ஆகியோர் அரங்கில் மு.நடராசன், கே.குப்பன், இரா.நாராயணன், த.கருணாநிதி நுழைவு வாயிலில் லட்சிய போராளிகள் கு.வைலய்யம், பாரதிமோகன் ஆகியோர் மேடையில் நடக்கிறது. கவிஞர் நாராயண மூர்த்தி தமிழ்த்தாய் வாழ்த்து பாடலும் நாத்திகம் என்.எஸ்.ஸ்ரீதர் கழக கொள்கை பாடல் பாடுகிறார்கள்.

கர்நாடக மாநில திராவிட முன்னேற்ற கழக மாநில அமைப்பாளர் ந.இராமசாமி, அவைத் தலைவர் மொ.பெரியசாமி, பொருளாளர் கே.தட்சணாமூர்த்தி, துணை அமைப்பாளர் ஜி.இராமலிங்கம், கர்நாடக மாநில இளைஞரணி அமைப்பாளர் டி.சிவமலை, முன்னாள் பொறுப்புக்குழு உறுப்பினர்கள் கு.ஆதித்தன், இரா.நாமதேவ், இரத்தினகுமார், கர்நாடக மாநில தொழிலாளர் முன்னேற்ற சங்க துணைத்தலைவர் ஆ.கரிகாலன் ஆகியோர் முன்னிலையில், கர்நாடக மாநில கழக முன்னாள் பொறுப்புக் குழுச் செயலாளர் தி.கிள்ளி வளவன் தலைமையில் நடக்கிறது.

விழாவில் சிறப்பு விருந்தினர்களாக மாநில கழக முன்னாள் பொறுப்பு குழு உறுப்பினர்கள் கே.எஸ்.சுந்தரேசன், வி.எஸ்.மணி, கர்நாடக மாநில தி.மு.க. இளைஞரணி துணை அமைப்பாளர்கள் மு.ராஜசேகர், ந.விக்ரம், லியோராஜன், முருகானந்தன், விகாஸ், தலைமை கழக பேச்சாளர் ஆற்காடு அன்புகன், பெங்களூரு நீலச்சந்திரா வார்டு செயலாளர் மாணிக்கவேலு ஆகியோர் கலந்து கொள்கிறார்கள்.

முப்பெரும் விழாவில் நாத்திகம் என்.எஸ்.ஸ்ரீதர் (பெரியார் விருது), ஆல்பர்ட் குமார் (பேரறிஞர் அண்ணா விருது), எஸ்.சேகரன், (முத்தமிழறிஞர் கலைஞர் விருது), ஜீவானந்தம் (இனமான பேராசிரியர் விருது), ஸ்ரீதர் (கழக தலைவர் தளபதி விருது), த.நாராயணமூர்த்தி (பாவேந்தர் பாரதிதாசன் விருது), சீனிவாசன் (முரசொலிமாறன் விருது), துரைவிக்டர் (சுடரொளி கு.வைவலய்யம் விருது) வழங்கப்படுகிறது.

கடந்த 1979ல் நடந்த இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் பங்கேற்று சிறை சென்ற சு.கலையரசன், கு.ஆதித்தன், கு.அருணாச்சலம் மற்றும் கழக 1987ல் நடந்த சட்ட எரிப்பு போராட்டத்தில் பங்கேற்று சிறை சென்ற கு.அறிவழகன், மா.ரவிகுமார், பூபாலன் ஆகியோருக்கு சிறப்பு பாராட்டு விருது வழங்கப்படுகிறது. இதுதவிர சிறப்பாக கழக பணியாற்றி வரும் குணேசத்துங்கன், ஏ.தேவராஜ், பி.ஆனந்தன், பி.முருகன், பி.தசரதன், கு.ஜெகதீசன், எஸ்.ராஜேந்திரபிரசாத், பி.ஏ.டேவிட், எஸ்.சந்திரசேகர், ஒய்.தாமஸ், க.பெருமாள், ஜி.ரவீந்திரன், ஏ.பி. எம்.சேகரன், ஆ.கரிகாலவளவன், டி.தேவநேசன், வி.கார்த்திக், ஜெ.மதிவாணன், பூம்புகார் நெடுஞ்செழியன், நா.காசிநாதன் கவுரவிக்கப்படுகிறார்கள்.

விழாவில் தலைமை கழக பேச்சாளர் ம.வள்ளி மைந்தன், கர்நாடக மாநில திமுக இலக்கிய அணி செயலாளர் போர்முரசு கதிரவன், மாநில மகளிரணி அமைப்பாளர் சற்குண இளமதி, பொன்.சாரங்கபாணி, மாநில கழக முன்னாள் பொறுப்பு குழு உறுப்பினர் ஏ.டி.ஆனந்தராஜ் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகிறார்கள். சிறப்பு விருந்தினராக திமுக கொள்கை பரப்பு செயலாளரும், கழக மாநிலங்களவை குழு தலைவர் திருச்சி என்.சிவா பங்கேற்று கலைஞர் நூற்றாண்டு விழா மலரை வெளியிட்டு சிறப்புரை ஆற்றுகிறார். தொடக்கத்தில் ஏ.வீ. மதியழகன் வரவேற்கிறார்.

முடிவில் கு.அறிவழகன் நன்றி கூறுகிறார்.

---

### சோ.பா. மலர்வண்ணன் ஏற்பாட்டில்! திருக்குவளை பள்ளியில் வகுப்பு அளவில்

# முதல் மூன்று இடம் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு ரொக்கப்பரிசு!

### மாவட்டச் செயலாளர் என்.கௌதமன் வழங்கினார்!

நாகை, ஆக.3–

நாகை மாவட்டம் திருக்குவளை கல்வி வளர்ச்சி அறக்கட்டளை சார்பில் ஒன்றிய செயலாளர் சோ.பா. மலர்வண்ணன் ஏற்பாட்டில் திருக்குவளை அஞ்சுகம் முத்துவேலர் மேல்நிலை பள்ளி மற்றும் கலைஞர் படித்த ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் பயின்ற மாணவ, மாணவிகளுக்கு கலைஞர் அவர்களின் 101 வது பிறந்த நாளை முன்னிட்டு இரண்டு பள்ளிகளிலும் பள்ளி அளவில் வகுப்பு வாரியாக முதல் மூன்று இடம் பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசுத்தொகை மற்றும் 1050 மாணவ, மாணவிகளுக்கு நோட்டு, பேனா உள்ளிட்ட எழுது பொருட்கள் வழங்கும் விழா அஞ்சுகம் முத்துவேலர் அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது.

விழாவிற்கு கீழ்வேளூர் மேற்கு ஒன்றிய தி.மு.க. செயலாளரும், கல்வி வளர்ச்சி அறக்கட்டளை தலைவர் மலர்வண்ணன் தலைமை தாங்கினார். தி.மு.க. மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் என்.இளையராஜா, திருக்குவளை ஊராட்சி மன்ற தலைவர் இல.பழனியப்பன் ஆகியோர் முன்னிலை வகித்தார். பள்ளியின் தலைமை ஆசிரியர் பிரதாப் வரவேற்றார்.

திருக்குவளை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி மற்றும் அஞ்சுகம் முத்துவேலர் மேல்நிலைப்பள்ளியில் படிக்கு மாணவ, மாணவிகளுக்கு வகுப்பு அளவில் முதலிடம் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுத்தொகை மற்றும் பள்ளியில் படிக்கும் அனைத்து மாணவ, மாணவிகளுக்கு நோட்டு, பேனா மற்றும் எழுதுப்பொருட்களை நாகை மாவட்ட தி.மு.க. செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவர் என்.கௌதமன் வழங்கினார்.

விழாவில் பொதுக்குழு உறுப்பினர் கோசி.குமார், தலைமைநிறு ஒன்றியக் குழு தலைவர் ஆர்.தி.தமிழரசி, ஒன்றிய தி.மு.க. பொருளாளர் சண்முகசுந்தரம், ஒன்றிய துணைச் செயலாளர் பார்த்திபன், மாவட்ட சார்பு அணி துணை அமைப்பாளர்கள் வர்த்தகர் அணி வி.எம்.கே.பாலாஜி, இலக்கிய அணி துவளை கணேசன், விவசாய தொழிலாளர் அணி பி.தியாகராஜன், தொண்டர் அணி ஜோதிபாசு, விவசாய அணி செந்தில், வழக்கிறிஞர் அணி பூவை முருகு, ஒன்றியக் குழு உறுப்பினர் சுதா அருணகிரி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.





முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா, நாடாளுமன்றத் தேர்தல் வெற்றி மற்றும் விக்கிரவாண்டி இடைத்தேர்தல் வெற்றிகளை முன்னிட்டு சென்னை இசைக் குழுவினரின் இன்னிசை பாட்டு மற்றும் பட்டிமன்ற நிகழ்ச்சி பொள்ளாச்சி தாலுக்கா லாரி உரிமையாளர்கள் சங்கம் திருமண மண்டபத்தில் 30–7.2024 அன்று கழக சட்டதிட்ட திருத்தக்குழு உறுப்பினர் தென்றல் செல்வராஜ் ஏற்பாட்டில் பொள்ளாச்சி நகர்மன்ற துணை தலைவர் கௌதமன் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் மணிமாறன் தென்றல் வரவேற்பு பேசினார். நிகழ்ச்சியில் மாவட்ட அவைத் தலைவர் மயூரா சுப்பிரமணியம், எம்.அமுத பாரதி, அமைப்பு சாரா ஓட்டுநர் அணி துணை செயலாளர் பனப்பட்டி தினகரன், பொள்ளாச்சி நகர்மன்ற தலைவர் சியாமளா நவநீதகிருஷ்ணன், மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர் டி.மருதராஜ், நகர்மன்ற உறுப்பினர்கள் பி.ஏ.செந்தில்குமார், யோவெல் துரை, உமா மகேஸ்வரி, ஈ.ஆர்.பழனிச்சாமி, செ.மணிமாலா, எம்.கவிதா, நாகராஜ், அ.பாத்திமா அக்பர், ஆர்.நாச்சிமுத்து, மாவட்டப் பிரதிநிதி வடிவேல், வடட செயலாளர்கள் ஞானவேல், கே.பி.மணிகண்டன், கரியாம்பட்டி செல்வராஜ், செந்தில்ராஜ், கமலக்கண்ணன், அங்கு ராஜ், ரவி மற்றும் கழக நிர்வாகிகள், கழகத் தோழர்கள் பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



புதுக்கோட்டை இராணியார் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில், விலையில்லா சீருடைகள் வழங்கும் திட்டத்தின்கீழ், சத்துணவு உண்ணும் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா சீருடைகளை, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா தலைமையில் 29.07.2024 அன்று வழங்கினார். உடன் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா, மாநகராட்சி மேயர் திருமதி.திலகவதி செந்தில், புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் செல்வி.பா.ஐஸ்வர்யா, முதன்மைக் கல்வி அலுவலர் (பொ) கூ.சண்முகம், மாவட்ட சமூகநல அலுவலர் செல்வி.க.ந.கோகுலப்பிரியா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.